DINAKARAN

PAGE NO: 15 DATE: 08-12-2023



புதுவை பல்கலையில்

# இளம் வாக்காளர்களுக்கான வினாடி வினா நிகழ்ச்சி



▶ புதுவை பல்கலையில் தேர்தல் துறை சார்பில் மாணவர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

**புதுச்சேரி, டிச. 8:** புதுச்சேரி மாநில தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி அறிவுறுத்தலின்படி, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இளம் வாக்காளர்களுக்கான வினாடி வினா மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் வாக்குப்பதிவு அதிகாரி சுரேஷ்ராஜ் கலந்து கொண்டு, இந்திய நாட்டின் தேர்தல் நடைமுறைகள் குறித்து விளக்கினார். அவர் பேசும்போது, தற்போது கடந்த அக்டோபர் 29ம் தேதி தொடங்கி வாக்காளர் பட்டியல் சுருக்குமுறை திருத்தல் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணி (நாளை) 9ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே விடுபட்டவர்கள் யாரேனும் இருந்தால் இத்திருத்தப்பணியில் பங்கேற்று வாக்காளர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவர்களுக்கு வரும் ஜனவரியில் அடையாள அட்டை கிடைத்துவிடும். இம்முகாமில் ஜனவரி 1ம் தேதி மட்டுமின்றி ஏப். 1, ஜூலை 1, அக். 1 ஆகிய தேதிகளில் 18 வயது நிரம்புபவர்கள் அனைவரும் வாக்காளர் அடையாள அட்டை பெற தகுதியுடையவர்கள் ஆவர் என்றார்.

முறைப்படுத்தப்பட்ட வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்களிப்பு அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கோவிந்தசாமி (எ) கோபு பேசுகையில்:

இந்தியாவில் 91கோடிக்கும் மேலான வாக்காளர்கள் உள்ளனர். ஆனால் கடந்த 2019 நாடாளுமன்ற தேர்தலில் அகில இந்திய அளவில் சுமார் 67 சதவீதம் வரையே வாக்குகள் பதிவானது.

இது மிக குறைவு. இந்த சதவீதத்தை உயர்த்த வேண்டும். அதற்கு தகுதியான மாணவர்கள் அனைவரும் வாக்காளர் அடையாள அட்டையை பெறுவதுடன், தேர்தலின் போது நிச்சயம் வாக்களிக்க வேண்டும். மேலும் பெற்றோர்கள், அருகில் உள்ளவர்களிடமும் தேர்தல் மற்றும் ஜனநாயகம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வாக்குகளை பதிவு செய்ய வைக்க வேண்டும் என்றார்.

இதனை தொடர்ந்து, ஓட்டர்ஸ் ஹெல்ப் லைன் என்ற மொபைல் ஆப் செயலி மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், தேர்தல் குறித்து வினாடி வினா போட்டியும் மாணவர்களிடையே நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வாக்குப்பதிவு அதிகாரி சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, பல்கலைக்கழக மாணவர் நலன் டீன் வெங்கடராவ் இம்முகாமை தொடங்கி வைத்தார்.

முடிவில் பல்கலைக்கழக மாணவர் நலன் துணை டீன் சிபி நன்றி கூறினார்.

DINAKARAN

PAGE : 14 DATE: 08.12.2023



# 2022-23ல் கொடி நாள் நிதியாக ₹57.79 லட்சம் வசூல்

## பள்ளி கல்வித்துறை முதலிடம்



புதுச்சேரி சட்டசபையில் கொடிநாள் நிதியை முதல்வர் ரங்கசாமி வழங்கி தொடங்கி வைத்தார். அருகில் சபாநாயகர் செல்வம், தலைமை செயலர் ராஜீவ்வர்மா, டிஜிபி ஸ்ரீனிவாஸ்.

புதுச்சேரி, டிச. 8: இந்திய நாட்டின் பாதுகாப்பிற்காக தன் இன்னுயிரையும் இளமை பருவத்தையும் அர்ப்பணித்து கொண்ட முப்படை ராணுவ வீரர்களின் தியாகத்தையும், வீரத்தையும் நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7ம் நாள் கொடி தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதுச்சேரி அரசு, முப்படை நலத்துறை சார்பில் கொடி நாள் நிகழ்ச்சி சட்டசபையில் உள்ள முதல்வர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் முதல்வர் ரங்கசாமி கலந்து கொண்டு நிதி வழங்கி கொடி நாள் நிதி திரட்டலை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, 2022-23ம் நிதியாண்டில் அதிக கொடி நாள் நிதி திரட்டிய அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு கேடயங்களை வழங்கி கவுரவித்தார். மேலும், காரைக்கால், மாகே மற்றும் ஏனாம் பகுதிகளின் கொடி நாள் நிதிக்கான பங்களிப்பை கவுரவிக்கும் வகையில் அப்பகுதி நிர்வாகிகளுக்கும், ஜிப்மர் மருத்துவமனை மற்றும் புதுவை பல்கலைக்கழகத்திற்கும் கேடயங்களை வழங்கி கவுரவித்தார். சபாநாயகர் செல்வம், லட்சுமிகாந்தன் எம்எல்ஏ, தலைமை செயலர் ராஜீவ் வர்மா, முப்படை நலத்துறை செயலர் பத்மா ஜெய்ஸ்வால், மாவட்ட ஆட்சியர் வல்லவன், டிஜிபி ஸ்ரீனிவாஸ், முப்படை நலத்துறை இயக்குநர் சந்திரகுமரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். கடந்த 2021-22ல் கொடி நாள் நிதியாக 49.95 லட்சம் வசூலிக்கப்பட்டது. ஆனால், 2022-23ல் ரூ.57.79 லட்சம் வசூலிக்கப்பட்டது. இது 2021-22ம் நிதியாண்டை விட ரூ.7.84 லட்சம் அதிகமாகும். இதில் அதிக நிதி திரட்டிய துறைகளில் பள்ளி கல்வித்துறை ரூ.15.50 லட்சத்தை வசூலித்து முதலிடத்தையும், வருவாய்த்துறை ரூ.4.08 லட்சம் வசூலித்து 2ம் இடத்தையும், காவல்துறை ரூ.3.26 லட்சத்தை வசூலித்து மூன்றாம் இடத்தையும் பிடித்தது. வெளி பிராந்திய பிரிவில் காரைக்கால் மாவட்டம் ரூ.7.41 லட்சம் வசூலித்து முதலிடத்தையும், மாகே பிராந்தியம் 1.72 லட்சம் வசூலித்து 2ம் இடத்தையும், ஏனாம் பிராந்தியம் ரூ.54 லட்சம் வசூலித்து 3ம் இடத்தையும் பிடித்தது. பிற நிறுவனங்கள் பிரிவில் ஜிப்மர் ரூ.3.88 லட்சம் திரட்டி முதல் இடத்தையும், புதுச்சேரி பல்கலைக்கழகம் ரூ.1.56 லட்சம் திரட்டி 2ம் இடத்தையும் பிடித்தன. தனி நபர் பிரிவில் உமா ரூ.8 ஆயிரமும், ஈஸ்வரி ரூ.5 ஆயிரமும், பெரியசாமி ரூ.2 ஆயிரமும், சிவலிங்கம் ரூ.ஆயிரம் செலுத்தி முதல் 4 இடங்களை பிடித்துள்ளனர்.

DAILY THANTHI

PAGE NO: 11 DATE: 08.12.2023



கொடிநாள் நிதியை முதல்-அமைச்சர் ரங்கசாமி உண்டியலில் செலுத்தி தொடங்கிவைத்தபோது எடுத்தபடம். அருகில் சபாநாயகர் செல்வம், தலைமைச் செயலாளர் ராஜீவ் வர்மா, போலீஸ் டி.ஜி.பி. ஸ்ரீநிவாஸ் ஆகியோர் உள்ளனர்.

# கொடிநாள் வசூலில் சாதனை படைத்த அரசு துறைகளுக்கு பரிசு

## முதல்- அமைச்சர் ரங்கசாமி வழங்கினார்

புதுச்சேரி, டிச.8-

கொடிநாள் வசூலில் சாதனை படைத்த அரசு துறைகளுக்கு பரிசு கேடயங்களை முதல்-அமைச்சர் ரங்கசாமி வழங்கினார்.

### கொடிநாள் வசூல்

இந்திய நாட்டின் பாதுகாப்புக்காக தன் இன்னுயிரையும், இளமைப்பருவத்தையும் அர்ப்பணித்த முப்படை ராணுவ வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 7-ந் தேதி கொடி நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி கொடிநாள் நிகழ்ச்சி சட்டசபையில் முதல்-அமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. முதல்-அமைச்சர் ரங்கசாமி கொடிநாள் நிதி வசூலை உண்டியலில் பணம் போட்டு தொடங்கிவைத்தார். மேலும் கடந்த ஆண்டு அதிக நிதி வசூல் செய்த அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு பரிசு கேடயங்களை வழங்கினார்.

இதில் சபாநாயகர் செல்வம், லட்சுமிகாந்தன் எம்.எல்.ஏ., தலைமை செயலாளர் ராஜீவ் வர்மா, முப்படை நலத்துறை செயலாளர் பத்மா ஜெய்ஸ்வால், கலெக்டர் வல்லவன், போலீஸ் டி.ஜி.பி. ஸ்ரீநிவாஸ், முப்படை நலத்துறை இயக்குனர் சந்திரகுமரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கல்வித்துறை முதலிடம்

மாநிலத்தில் கடந்த நிதியாண்டில் ரூ.57 லட்சத்து 79 ஆயிரம் கொடிநாள் நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது. அதாவது ரூ.15 லட்சத்து 50 ஆயிரம் வசூலித்து கல்வித்துறை முதல் இடத்தை பிடித்தது. ரூ.4 லட்சத்து 8 ஆயிரம் வசூலித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை 2-வது இடத்தையும், ரூ.3 லட்சத்து 26 ஆயிரம் வசூலித்து காவல் துறை 3-வது இடத்தையும் பிடித்தது.

மேலும் பிற பிராந்தியத்தில் காரைக்கால் மாவட்டம் சார்பில் ரூ.7 லட்சத்து 41 ஆயிரம், மாகியில் ரூ.1 லட்சத்து 72 ஆயிரம், ஏனாமில் ரூ.54 ஆயிரம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஜிப்மர் சார்பில் ரூ.3 லட்சத்து 88 ஆயிரம், புதுவை பல்கலைக்கழகம் ரூ.1 லட்சத்து 56 ஆயிரம், தனி நபர்கள் சார்பில் ரூ.2 லட்சத்து 15 ஆயிரம் வசூலிக்கப்பட்டுள்ளது.

DINAMALAR

PAGE NO: 02 DATE: 08.12.2023

# பல்கலை மாணவர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு




■ புதுச்சேரி பல்கலையில் நடந்த தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில், ஓட்டுப்பதிவு அதிகாரி சுரேஷ்ராஜ் பேசினார். அருகில், புல முதல்வர் வெங்கடராவ், தேர்தல் விழிப்புணர்வு பிரிவு அதிகாரி கோவிந்தசாமி.

**புதுச்சேரி, டிச. 8–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் தேர்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி, நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் பல்கலைக் கழக பொறுப்பு துணைவேந்தர் தரணிகரசு, புல முதல்வர் வெங்கடராவ் முன்னிலை வகித்தனர். ஓட்டுப்பதிவு அதிகாரி சுரேஷ் ராஜ், நாட்டின் தேர்தல் நடைமுறை பற்றி பேசினார்.

மாநில தேர்தல் விழிப்புணர்வு பிரிவு அதிகாரி கோவிந்தசாமி, மாணவர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தினார். தேர்தல் துறை பயிற்சியாளர் விவேகானந்தன் வாக்காளர்களுக்கான ஹெல்ப் லைன் செயலி குறித்து பயிற்சி அளித்தார். நிகழ்ச்சியின் இறுதியில், தேர்தல் பற்றிய வினாடி – வினா போட்டி நடந்தது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, தேர்தல் துறை சிறப்பு கண்காணிப்பு அதிகாரி சரவணன் செய்தார். துணை புல முதல்வர் சிபி நன்றி கூறினார்